மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன வார்த்தைகளும், பத்திரிகையில் வந்து இருக்கும் வார்த்தைகளும், உண்மையிலேயே அங்கே சொல்லப்பட்டு இருக்குமானால் அந்த லோக் சபா உறுப்பினர் திரு. சிவப்பா. . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. அந்த ப்ரோசீடிங்சில் அந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி, 'கலாட்டா', "ஹல்லா-ஹுல்லா" என்று எல்லாம் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட வார்த்தைகள் உபயோகிப்பது உண்மையிலேயே affects the dignity of the House and will constitute contempt of the House இந்த அவையின் கண்ணியத்தை பாதிப்பதாகும். Therefore prima facie there is breach of privilege. அதிலே கொஞ்சம் கூட சந்தேகம் கிடையாது. இந்த மன்றத்திற்கு என்று உரிமைகள் உண்டு. இந்த மன்றத்திற்கு என்று கண்ணியம் உண்டு. இந்த மன்றத்தின் கண்ணியத்தையும், உரிமைகளையும் மீறுவதற்கோ, அவமதிப்பதற்கோ இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கோ, வேறு மன்றத்தின் உறுப்பினருக்கோ உரிமை கிடையாது. இந்த மன்றத்தின் உரிமைகளைக் காக்கும் பெரிய பொறுப்பு பேரவைத் தலைவர் என்ற முறையில் எனக்கு இருக்கிறது. அந்த வகையில் வெளியிலோ, லோக் சபையிலோ அல்லது வேறு மன்ற உறுப்பினர்களோ இப்படிப்பட்ட அவை உரிமை மீறிய செயலைச் செய்கிற நேரத்திலே அதற்காக என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதாவது, அவற்றை அந்த லோக்-சபை சபாநாயகருக்கு 'ரெஃபர்' செய்ய வேண்டுமென்று முறை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன விவரத்தை அந்த வகையில், அந்த உறுப்பினர் வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, மேல் நடவடிக்கை எடுப்பதற்கு லோக்-சபையின் சபாநாயகருக்குத் தெரியப்படுத்த இருக்கிறேன் என்று இந்த அவைக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

I will refer this matter to the Hon. Speaker of the Lok Sabha for appropriate action.

Thiru R. PONNAPPA NADAR : The reply received from that House, viz. Lok Sabha may also be placed before this House.

Mr. SPEAKER : Certainly that will be done.

(5) அறிக்கைகள் அளித்தல்

(அ) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை

Thiru P. SEENIVASAN : Sir, I present the Second Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

(ஆ) அரசின் உறுதி மொழிக் குழுவின் முதலாவது அறிக்கை

Thiru MANALI C. KANDASAMY : Sir, I present the First Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.